முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1313

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.05.2023, வியாழக்கிழமை

1. ஞானத்தின் காவலனே அரங்கா வாழ்க
ஞானிகளை வழிபட வகைசெய்யும்
ஞானதேசிகனே கலியுகத்தின் அரசனே
ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 21ம் நாள், 04.05.2023, வியாழக்கிழமை)
உலகத்தில் உன்வழி மக்கள்வர உரைப்பேன்
தானதர்ம சக்திகொண்டு நீ
தயவாக காட்டுகின்ற மார்க்கம் உயர்மார்க்கம்
3. மார்க்கம் தனில் உலகம் மாற்றம்பெறும்
மார்க்கம் தன்னால் உலகோர் மகான்களாவர்
பார்த்துரைக்க உன்மார்க்கம்தான் இந்த உலகில்
பழுதின்றி ஞானசபை அமைத்து அருளும்
4. அருளவே அரங்கன் நீ ஆற்றலோடு நடத்துகின்ற
ஆக்கமான தர்மமும் சன்மார்க்கமும் தான்
மாற்றத்தை உலகில் நடத்தி இனிதே
மக்களுக்கெல்லாம் தர்மவழி
5. ஞானவழி எவ்வளவு அவசியம் என்கின்ற அற்புதத்தை வழிநடத்தி இனிதே
ஞானவான்களாக மக்களெல்லாம் மாயைபற்றுகளை நீக்கி மனஆற்றல்பட இனிதே
தேக்கமின்றி தயவின்வழி தொடர்ந்துவந்து
தெய்வநெறிகாட்டும் அரங்கனே கலியின் சிறந்தஞானி என
6. என உலகோர் இனிதே சிறந்து ஞானம் பயின்று உன்வழி இனிதே
தானம்செய்து தடையற அவர்களெல்லாம்
தரணியில் தவசிகளாக தர்மவான்களாக
தவராஜன் நீதேர்வுசெய்த ஞானிகளாக

7. ஆகவே உலககோர் மாற்றம் பெறுவர் இந்த அற்புதத்தை நோக்கி
ஆறுமுகன்யான்
நித்தம் உமக்கு ஆற்றலாக ஆக்கமாக ஞானம் அருளிவர
அரங்கன் உன்னை வணங்கி அடிபணிந்து தீட்சை ஏற்று
நீதரும் உயர்வான அருளமுது உண்டு உன்நாமஜெபம் போற்றினாலே போதும்

8. போதுமப்பா அற்புதம் கலியில் நடக்கும்நடக்கும்
புண்ணியவான்கள் பெருகி இந்தஉலகில்
பூதலமெல்லாம் தர்மபலத்தால் பாதுகாப்புபெறும்
புதுமைகாணும் ஞானவழியில் புரட்சியும் நிகழும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–